(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(6).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 ஒற்றோபர் 25 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 நவெம்பர் 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2013 நவெம்பர் 29, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2507/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் பல பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களுக்கான குறைபாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2937/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தொகை மதிப்பீட்டுக்கான மொத்தச் செலவையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொகை மதிப்பீட்டின் போது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iii) சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் மற்றும் ஏனையோர் என்ற இன அடிப்படையில் நாட்டின் சனத்தொகையையும்;

(iv) பௌத்தம், கிறிஸ்தவம் (அனைத்துப் பிரிவுகளும்), இந்து, இஸ்லாம் என்ற மத அடிப்படையில் நாட்டின் சனத்தொகையையும்

(v) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) குடிசனத்தொகை மதிப்பீட்டுத் தரவுகளைப் பகுப்பாய்வு (Data Scanning) செய்வதற்கான கொள்வனவு விலைமனுக் கோரல் தொடர்பில்,

(i) விலைமனுவினைப் பெற்றுக்கொண்டவரையும்;

(ii) ஒவ்வொரு விலைமனுவிற்கும் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள், தொகை போன்றவற்றை வெவ்வேறாகவும்;

(iii) விலைமனுக் கோரல் சபைக்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2989/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான பானம சாஸ்த்ரவெல பிரதேசத்தில் 1220 ஏக்கர் அளவினதான காடுகளும் விவசாய நிலங்களும் கடற்படையினராலும் விசேட அதிரடிப் படையினராலும் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பில் 'ரணவிரு' கிராமமொன்றையும் கடற்படை முகாமொன்றையும் ஹோட்டல் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்பில் அமைந்துள்ள பெலும்காராராம விகாரை உள்ளிட்ட மேலும் பல தொல்பொருளியல் சார்ந்த இடங்களுக்குப் பிரவேசிப்பது மக்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ள தென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் பிரதேசத்தின் மக்கள் வாழ்க்கைக்கும் இயற்கைச் சூழலுக்கும் தீவிர தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட காணிகளை சுவீகரிப்பதற்காக சட்டபூர்வ அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்படுவதால் காணிகளையும் ஆதனங்களையும் இழக்கின்ற மக்களுக்கு மீண்டும் காணிகளை அல்லது நட்டஈட்டினை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3061/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஹொறனை, மத்துகமை மற்றும் களுத்துறை ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அனேக பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகள் நிதியின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்தில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணிப்புக்காக அரசாங்கம் ஒதுக்கிய நிதிக்கு என்ன நடைபெற்றது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் தேவையான நிதித்தொகை யாது;

(iv) உரிய நிதி ஏற்பாடுகளை விரைவில் ஒதுக்கீடு செய்து, குறித்த பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3342/ '12

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் மாவிலாறு பயிர்ச் சேதம் தொடர்பில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து இருந்து பணம் செலுத்தப்பட்டதா;

(ii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு செலுத்தப்பட்ட கமக்காரர்களின் எண்ணிக்கை, கமக்காரரொருவருக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் அதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

(iii) மேற்படி பணம் செலுத்தப்படுகையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா;

(iv) ஆமெனில் மேற்படி மோசடி புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா;

(v) வழங்கப்பட்ட தண்டனை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3254/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அண்மையில் மடிக் கணினிகள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஊடகவியலாளர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மடிக் கணனிகளை வழங்குவதற்காக ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி கணனியொன்றின் விலை எவ்வளவு என்பதையும்;

(v) இற்றைவரை வழங்கப்பட்டுள்ள மடிக் கணனிகளுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3351/ ’12

கௌரவ பி.ஹரிசன்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 02, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2613/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் பொல்பிதிகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹமடகல்ல வாவி எனும் பெயரில் உத்தேச நீர்ப்பாசன திட்டமொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நீர்ப்பாசன திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட தேதி யாதென்பதையும்;

(iii) இற்றைவரை இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3146/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 சனவரி 1 முதல் இற்றைவரை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட உதவிகள், சலுசைக் கடன்கள், நன்கொடைகள் ஆகியவற்றின் அளவை தனித்தனியாக வருடாந்த அடிப்படையிலும்;

(ii) வருடமொன்றுக்கு வழங்கப்பட்ட நிதியங்களுக்கான அனைத்தையும் உள்ளிட்ட ஆகக்குறைந்த வட்டிச் செலவு யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு நிதியையும் திரும்பச் செலுத்துவதற்கான காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிடப்பட்ட நிதியங்கள் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திலிருந்தும் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3378/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் தற்போதுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) வடமத்திய மாகாணத்தில் பாடசாலைக் கல்விக்காக அம்மாகாண சபையினால் கடந்த ஐந்த ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதற்கேற்ப, கடந்த ஐந்தாண்டுகளில் மேற்படி மாகாணத்தில் ஒரு பாடசாலை மாணவனுக்காக வருடாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு மாணவனுக்கு செலவிடப்பட்ட ஒட்டுமொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் புதிய பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும், தற்போதுள்ள கட்டிடங்களை திருத்துவதற்காகவும், கடந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பாடசாலைகளில் 2012 ஆம் ஆண்டு முடிவடைகின்ற போது கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலைக்குமேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3398/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாநகர சபை தனது ஆளுகைப் பிரதேசத்தை அழகுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் நகரத்தின் பிரதானமான அரச பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் அமைந்துள்ள உள் வீதிகள் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமையால் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளன என்பதையும்;

(ii) உள் வீதிகளின் இருமருங்கிலும் ஆங்காங்கே குப்பை கூளங்கள் போடப்பட்டுள்ளமை பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாத்தறை மாநகர சபை எல்லைக்குள் பழுதடைந்துள்ள பாதைகளை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) குப்பை கூளங்களை அகற்றுவதற்கு ஒழுங்கான முறையியலொன்று பின்பற்றப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3622/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் முள்ளிக்குளம் கிராமத்திலிருந்த மக்களை அக்கிராமத்தில் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முள்ளிக்குளம் கிராமத்தில் இராணுவ முகாம்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) தற்போது முள்ளிக்குளம் காட்டில் இடம்பெயர்ந்தவர்களாக தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4079/ '13

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த முத்திரை மானியம் எவ்வளவு என்பதையும்;

(ii) ஏன் இந்த மானியம் குறைக்கப்படுகிறது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2614/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹக்வட்டுனாவ எனும் பெயரில் நீர்ப்பாசன திட்டமொன்று உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஹக்வட்டுனாவ நீர்ப்பாசன திட்டத்தின் கீழ்,

(i) எத்தனை ஏக்கர் நெற்காணி பயிர்செய்கை செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) பயன்பெறும் விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சிறு போகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு இயலாதிருப்பின், அவ்வாறு செய்வதற்கு இயலுமானவாறு ஹக்வட்டுனாவ நீர்ப்பாசன திட்டத்தை விருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3147/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு நிகர இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) தளத்தைக் கையாளுதல், தீர்வையற்ற விற்பனைகள், உள்ளக பஸ்வண்டிகள் செவை, பயணிகள் விமானப் பயணம் மற்றும் சரக்கு போன்றவற்றைக் கையாளும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் துணைக் கம்பனிகள் 2010, 2011, 2012 வருடங்களுக்கும் மற்றும் 2013 ஆம் ஆண்டின் இற்றை வரைக்குமான வருவாய் எவ்வளவு என்பதையும்;

(iii) ஒரு வருடத்திற்கு ஒரு வான் ஊர்திக்கான செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மொத்த பணியாட் தொகுதியினரின் சம்பளம் மற்றும் வருமானம்;

(ii) பயணிகள் மற்றும் விமானப் பயணிகள் இருக்கை பொதிச்சுமை;

(iii) சரக்கு விமானம் மற்றும் மொத்த வருமானம்;

(iv) மூலதன அருகலுக்கு ஏற்ப வருமானம் மற்றும் நிகர இலாபம்

என்பவற்றின் பிரதான விகிதத்தையும் அவர் கூறுவாரா?

(இ) ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், எமிரேற்ஸ் நிறுவனத்திடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டதில் இருந்து இற்றை வரைக்கும் ஆண்டு அடிப்படையிலான அதன் மூலதன மற்றும் பொது ஒதுக்குகள் எவ்வளவு என்பதை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2266/ '12

கௌரவ புத்திக பதிரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொட்டவில, கம்புறுகமுவ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு கே. கே அட்வின்,

(i) இலங்கை போக்குவரத்து சபையில் (இபோச) நிரந்தர பயிற்சிபெற்ற சாரதியாக 1965 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை சேவையாற்றியுள்ளர் என்பதையும்;

(ii) ஓய்வு பெற்ற பின்னரும் 1986 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டு வரை ஒப்பந்த அடிப்படையில் சாரதியாக மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) இதுவரை இவருடைய சேவைக்காலத்தின் பிரகாரம் இவருக்கு உரித்தாக வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய அனுகூலங்கள், பணிக்கொடைத் தொகை மற்றும் வேறெந்தவொரு கொடுப்பனவும் செலுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையினால் திரு அட்வினுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள ஊழியர் சேமலாப நிதிய அனுகூலங்கள், பணிக்கொடைத் தொகை மற்றும் இதர கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) உடல் ரீதியாக பலவீனமான நிலையில் இருக்கும் திரு. அட்வினுக்கு மேற்படி தொகையை செலுத்துவதற்கும் இருபது வருடங்களுக்கு மேலாக இபோசவினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி தொகைக்கான வட்டித் தொகையொன்றை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2647/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் காணிகளற்ற அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வீடுகளை நிர்மானித்துக் கொள்வதற்காக 10 பேச் அளவுக்கும் குறையாத 25,000 காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் மேற்கூறியவாறு காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3148/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 இல் இற்றைவரைக்குமான கடன்களின் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிகர ஒதுக்குகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் கூறுவதன் பிரகாரம் மேற்படி ஆண்டுகளில் ஒதுக்குகளின் அதிகரிப்பின் அளவு யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இற்றைவரைக்கும் ஒதுக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கடன்களின் தொகை என்னவென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இறக்குமதிகளின் விகிதமாக ஒதுக்குகளின் தொகை ஆண்டு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கூறப்படுவது போன்று ஒதுக்குகளின் நிலை சாதகமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3380/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் "*சபிரி*" பாடசாலைகளின் எண்ணிக்கை தனித் தனியாக எத்தனையென்பதையும்;

(ii) நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மேற்படி பாடசாலைகளின் எண்ணிக்கை மேற்படி மாகாணத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் படி தனித் தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மத்திய மாகாணத்தில் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் "*சபிரி*" பாடசாலைகளில் 2012 டிசெம்பர் மாதமளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) வட மத்திய மாகாணத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள"*சபிரி*" பாடசாலைகள் இருக்குமாயின் அவற்றின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) "*சபிரி*" பாடசாலைகளில் ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வசதிகள் யாவையென்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டு முடிவில் நாட்டினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த "*சபிரி*" பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) மேற்படி பாடசாலைகளின் பெயர் பட்டியலொன்றை அவை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) "*சபிரி*" பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆசிரியர் தரங்களைச் சேர்ந்த, பட்டதாரி மற்றும் ஏனைய தகைமைகள் போன்ற வகைப்படுத்தலின் கீழ் தனித்தனியாக எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3623/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தில் கொடகம நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி நகர அபிவிருத்தித் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கொடகம நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக சுவீகரிக்கப்பட்ட காணியொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காணி அமைந்துள்ள இடம் யாதென்பதையும்;

(iii) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொடகம நகரத்தில் காணிகள் மீட்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணிகளின் பெறுமதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2648/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய அனைத்து அரச ஊழியர்களினதும் வசதிக்காக நவீன சுகாதார வசதிகளுடனான "ஊழியர் மருத்துவ மனையொன்று" கண்டி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், குறித்த "ஊழியர் மருத்துவ மனையின்" நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3149/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011, 2012, மற்றும் 2013 இன் இற்றைவரையில் அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ள அனைத்து கடன்களினதும் மீளச் செலுத்தல் காலத்தை கடன்களுடன் வருடவாரியாகவும்;

(ii) எவ்வாறு வருமானம் ஈட்டப்பட்டு கடன்கள் மீள்செலுத்தப்படும் என்பதை உள்ளடக்கிய காசுப் பாய்ச்சல் கூற்றுக்களையும்;

(iii) அரசாங்கம் பழைய கடன்களை செலுத்துவதற்காக மேலும் கடன் பெறப் போகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் கூறப்பட்டுள்ள காலத்தில் பெறப்பட்ட கடன்களுக்கான செலவினத்தை விட வருமானத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பையும்;

(v) நாடு கடன் பொறியொன்றை நோக்கிச் செல்கின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரசாங்கம் கடன்கள் அரசாங்க முறிகள் போன்றவற்றின் மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக கடன் பெற்றுள்ள சந்தர்ப்பங்களையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3422/ '13

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் ஹக்மன பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரசேத்தில் அமைந்துள்ள எல்லவெல வாவியின் புனரமைப்புப் பணிகள் சமீபத்திய நாட்களில் மேற்கொள்ளப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவை என்பதையும்;

(iii) புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கென முன்வந்த ஒவ்வொரு கேள்விப் பத்திரதாரரினதும் பெயர், முகவரி மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) வாவியின் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட தற்போதைய ஒப்பந்ததாரரின் பெயர், முகவரி மற்றும் இவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2651/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய மல்வத்துஓயாவுக்கும் யான்ஓயாவுக்கும் இடையிலான வடக்கு சமவெளியின் ஆறுகள் மற்றும் கால்வாய்களை அண்டியதாக உள்நாட்டு தொழில்நுட்பத்தையும் உழைப்பையும் பயன்படுத்தி நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு 30 புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3150/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் இற்றை வரை உதவிகள், சலுகைக் கடன்கள் மற்றும் மானியங்கள் போன்ற மேற்படி நிதியிடல் வகைகள் மூலமாக அரசாங்கம் சீனாவிடமிருந்து பெற்றுள்ள தொகைகளை வருட வாரியாக வெவ்வெறாகவும்;

(ii) வழங்கப்பட்டுள்ள நிதிகளுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த வட்டிச் செலவினத்தை வருடவாரியாகவும்;

(iii) ஒவ்வொரு நிதியிடலுக்குமான மீளச் செலுத்தல் கால அளவினையும்;

(iv) நிதியிடல் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களையும்;

(v) கடன் வழங்கப்பட்டுள்ள திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான ஒவ்வொரு கடனினதும் காசுப் பாய்ச்சல் கூற்றினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3364/ '12

கௌரவ பி. ஹரிசன்,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பெனியினால் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட எப்பாவல றொக் பொஸ்பேற் உரத்தின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) உரம் உற்பத்தி செய்வதற்காக பொஸ்பேற் கம்பெனி வசமுள்ள உற்பத்தி இயந்திரங்களின் எண்ணிக்கை யாது;

(iii) பொஸ்பேற்றுக்கான வருடாந்த உள்நாட்டுத் தேவை எத்தனை மெட்றிக் தொன்;

(iv) பொஸ்பேற் கம்பெனியின் வருடாந்த உற்பத்தியில் மிகைநிலை நிலவுகின்றதா;

(v) ஆமெனில், அந்த மிகைநிலை எத்தனை மெட்றிக் தொன்;

(vi) உள்நாட்டுத் தேவைகளை நிறைவேற்றப் போதுமான உற்பத்தி ஆற்றல் நிலவுகின்றபோது, மேற்படி கம்பெனிக்கு புதிதாக உரம் தயாரிக்கும் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணம் யாது;

(vii) மேற்படி புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட வேளையில் கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்ட இயந்திரத்திற்கான,

(i) அனுப்பாணை மேற்கொள்ளப்பட்ட வழிமுறை யாது;

(ii) கொள்வனவு செய்ய செலவிட்ட பணத்தொகை யாது;

(iii) அனுப்பாண மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்கள் சீனாவுக்கு செல்கின்றபோதுகூட மேற்படி இயந்திரம் இலங்கைத் துறைமுகத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்ததென்பதை அறிவாரா;

(iv) தற்போது மேற்படி இயந்திரம் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற உரம் மெட்றிக் தொன் அளவு யாது;

(v) மேற்படி இயந்திரம் பொருத்தப்பட்ட கட்டடத்தை நிர்மாணிக்க செலவிடப்பட்ட பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3419/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடந்த 10 வருட காலத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு அரசு வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவை;

(iii) முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டர் சைக்கிள்கள் சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுகின்றவர்களை ஊக்குவிப்பதற்காக அந்த வாகனங்களின் உதிரிப்பாகங் களுக்கு வரிச் சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஏற்கனவே அவ்வாறான சலுகைகள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3624/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள், அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹல்தும்முல்ல பிரதேச சபையினால் ஹல்துமுல்ல, போகஹபிட்டிய, சொரகுணே வனத்தினை அண்டிய பகுதி துப்பரவு செய்யப்பட்டு வீதியொன்று நிர்மாணிப்பு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) இதனுடன் தொடர்புடையதாக நடைபெறுகின்ற காடழிப்பு தொடர்பாக வேலி ஒயா விவசாய அமைப்பு மற்றும் பிக்குகள் அமைப்பின் ஊடாக சனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதி நிர்மாணிக்கப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்காக சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2652/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய 25 பிரதான நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், தாபிக்கப்பட்டுள்ள மேற்படி தகவல் தொழில்நுட்ப நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதான நகரத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3151/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கப்பல் கைத்தொழிலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள துறைமுகங்களை இயக்கும் ஐந்து நாடுகளையும்;

(ii) மேற்சொன்ன நாடுகளிலுள்ள ஒவ்வொரு சம்பந்தப்பட்ட துறைமுகத்தினாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சுறுத்தல்களை வெவ்வேறாகவும்;

(iii) அத்தகைய அச்சுறுத்தல்களுக்கெதிராகப் போராடுவதற்கும் அவற்றை உள்ளூர் கப்பல் போக்குவரத்திற்கு அனுகூலமாக்குவதற்கும் இலங்கை எவ்வாறு உத்தேசித்துள்ளது என்பதையும்;

(iv) வருடவாரியாக 2010, 2011, 2012 ஆகிய வருடங்களில் அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அச்சுறுத்தல் விடுக்கும் துறைமுகங்களின் கொல்கலன் ஏற்றி இறக்குதல்களை வெவ்வேறாகவும்;

(v) எதிர்வரும் ஐந்து வருடங்களில் மேற்சொன்ன துறைமுகங்களின் நடவடிக்கை தொடர்பான எதிர்பார்ப்புக்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கை கொள்கலன் ஏற்றி இறக்கல்களை எந்தத் துறைமுகங்களிலிருந்து கவர்ந்துகொள்வதற்கு எதிர்பார்க்கின்றது என்பதையும்;

(ii) மேற்படி துறைமுகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படவுள்ள கொள்கலன் ஏற்றி இறக்குதல்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பொறுப்பேற்றுக்கொள்ளப்படவிருக்கும் மேற்சொன்ன கொள்கலன் ஏற்றி இறக்குதல்களின் மொத்த எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3420/ '13

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் ஹக்மன பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தெனகம வாவியில் நீர் கசிவு ஏற்பட்டிருந்ததென்பதையும்;

(ii) அந்த வாவியை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றதென்பதையும்;

(iii) வாவியின் புனரமைப்புப் பணிகள் உரிய நியமங்களுக்கமைய இடம்பெறுவதில்லையெனவும் பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகை பெறப்படுகின்ற மூலம் யாது என்பதையும்;

(iii) புனரமைப்புப் பணிகளுக்காக ஒப்பந்தகாரர்களை தெரிவுசெய்வதற்கு கேள்விப் பத்திரம் கோரல் நடைபெற்றதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் அதற்காக முன்வந்த ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் பெயர், முகவரி மற்றும் முன்வைக்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) தற்போது வாவியின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரரின் பெயர், முகவரி மற்றும் இவரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி ஒப்பந்தக்காரர் மேற்கொள்ளும் புனரமைப்புப் பணிகள் தரநியமமற்றதென முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக முறையானதொரு விசாரணையை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2208/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பில் கடந்த ஐந்து ஆண்டுகளில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, ஒரு பணியாளருக்கான செலவு அல்லது இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அபிவிருத்தி லொத்தர் சபை, கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2224/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், குருநாகல், அனுராதாபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கென்றே 15000 வீடுகளைக் கொண்ட மூன்று புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2439/ '12

கௌரவ புத்திக பதிரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தில் நில்வளா பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் அமைந்துள்ள இன்னாக் காட்டுப் பிரதேசத்தில் பெருந்தொகையான வயல்கள் பாழடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகளை நெற்பயிர்ச்செய்கைக்காகவோ வேறு பயிரினங்களைப் பயிரிடவோ பொருத்தமான வகையில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிலத்தைச் சாகுபடி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3365/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாண அரசாங்க பாடசாலைகளில் தற்போது சேவையாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) கற்பிக்கும் பாடங்களுக்கமைய அவ்வாசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iii) மேற்படி மாகாணத்தின் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் சங்கீதம் ஆகிய பாடங்களுக்கும் ஆரம்பப் பிரிவில் கற்பிப்பதிலும் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை தனித்தனியாக எவ்வளவு;

(iv) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் மிகைநிலை நிலவுகின்ற பாடங்கள் மற்றும் அந்த ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் நிலவுகின்ற மிகைநிலை யாது;

(v) மேற்படி மிகை ஆசிரியர்கள் ஆட்சேர்க்கப்பட்ட அடிப்படை யாது;

(vi) மிகை ஆசிரியர்கள் மத்தியில் உள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கையும் தொண்டர் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையும் தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வடமத்திய மாகாணத்தில் அத்தியாவசியமான பாடங்கள் தொடர்பில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ii) அதனூடாக மாகாணத்தின் ஆசிரியர் தேவைப்பாட்டை பூர்த்திசெய்யும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3628/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலைக்கு முத்திரையிட்டு மூடிவிடுவதற்கான காரணம் யாது;

(ii) மேற்படி தொழிற்சாலையை முத்திரையிட்டு மூடிய நிறுவனம் யாது;

(iii) 2011 நவம்பர் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை மேற்படி கடதாசித் தொழிற்சாலையின் உற்பத்திக் கொள்ளளவு மற்றும் வருமானம் எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலைக்கு சொந்தமாக இருந்த இயந்திர உபகரணங்கள் இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2653/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெண்களுக்கான விஷேட அலுவலக பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா;

(ii) அத்தகைய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2702/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பிரிவேனாக்களில் கல்வி பெறும் பிக்குமார்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களின் மத்தியில் தமது கல்வி அலுவல்களைச் செய்து வருகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது பிரிவேனாக்களில் கல்வி பெறும் ஒவ்வொரு தீட்சைபெறாத அல்லது தீட்சை பெற்ற மாணவருக்கும் வருடாந்தம் வழங்கப்படும் உதவித் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இப்பணத் தொகை தற்போதைய பொருளாதார நிலைமையுடன் ஒப்பிடும் போது போதியதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

(iii) அப்பணத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

(iv) அவ்வாறாயின் அதிகரிக்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2787/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) திரு. சரத் பொன்சேகா எப்போது விடுதலை செய்யப்பட்டார் என்பதை இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மன்னிப்பு நிபந்தனையுடனா அல்லது நிபந்தனையின்றியா வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) திரு. சரத் பொன்சேகாவின் ஓய்வூதிய உரிமைகள் மற்றும் இராணுவப் பட்டங்கள் மீண்டும் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(iii) அவரை தற்போதும் 'ஜெனரல்' என அழைக்க முடியுமா என்பதையும்;

(iv) திரு. சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஏதாவது வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பதையும்;

(v) சனாதிபதியின் மன்னிப்பு மூலம் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்குகள் வெற்றாக்கப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) திரு. சரத் பொன்சேகாவுடன் வேலை செய்தமைக்காக அல்லது அவருக்கு உதவியமைக்காக, தொல்லை கொடுக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய அதிகாரிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டனரா அல்லது அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) திரு. சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில்,

(i) பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அழுத்தங்களைப் பிரயோகித்த நாடுகள் மற்றும் அவை எப்போது பிரயோகிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அரசியல் மற்றும் சமயத் தலைவர்களது இணக்கப்பாடுகள் ஏன் கவனத்திற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2654/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஜன சபா முறை சட்டமாக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி ஜன சபா முறை சட்டமாக்கப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3197/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011, 2012 ஆம் ஆண்டுகளிலும் 2013 இல் இற்றைவரைக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட மீனின் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கையில் இருந்து மீனை இறக்குமதி செய்யும் நாடுகள் எவை என்பதையும்;

(iii) இலங்கையில் மீன் ஏற்றுமதி செய்யும் மிகப்பெரும் 5 கம்பனிகள் எவை என்பதையும்;

(iv) இலங்கை அரசாங்கத்திற்கு அவை செலுத்திய வரி எவ்வளவு என்பதையும்;

(v) அக்கம்பனிகளினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) மீன் ஏற்றுமதியை மேலும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்க முடியுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கான பயிற்சிப் பாடசாலை ஒன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறின்றேல், அத்தகைய ஒன்றை ஏன் உருவாக்க முடியாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3367/ '12

கௌரவ. பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு அரவணைப்பைப் பெறுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவரின் பராமரிப்புப் பணிகளுக்கென 2013 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் உள்ள சிறுவர் தடுப்புக் காவல் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) அப்பணத்தொகை இவர்களின் பராமரிப்புப் பணிகளுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3421/ '13

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நேரடியானதும் மறைமுகமானதுமான பெருந்தொகையான புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கி துரித வளர்ச்சி கண்டு வருகின்ற மோட்டார் வாகனக் கைத்தொழில் துறை தொடர்பாக கோட்பாட்டு ரீதியான பயிற்சியொன்றை இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக வழங்க முடியும் என்பதையும்;

(ii) மேற்படி துறையின் மேம்பாட்டிற்காக ஊடகக் கலாசாரமொன்றை உருவாக்குவது முக்கியத்துவம் பெறுகிறது என்பதையும்;

(iii) தற்போது மோட்டார் வாகனக் கைத்தொழில் துறை தொடர்பாக இலத்திரனியல் ஊடகங்களில் ஒலி/ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மோட்டார் வாகனக் கைத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை இலத்திரனியல் அலைவரிசைகள் வாயிலாக ஒலி/ ஒளிபரப்புவதற்காக நேரத்தை ஒதுக்கிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3629/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னாரை அண்டிய பிரதேசத்தில் பெற்றோலியம் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ள "Cairn India" எனப்படும் இந்திய கம்பனி தற்போது தமது அவதானிப்புகளை மேற்கொண்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கம்பினியினால், பெற்றோலியத்தை கண்டுபிடித்தல் தொடர்பில் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றகரமான அவதானிப்புகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பெற்றோலியக் கிணறுகள் அகழ்ந்ததன் பின்னர், அதன் உரிமை தொடர்பில் காணப்படும் உடன்படிக்கைகளின் இயல்பு யாதென்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைகளுக்கு ஏற்புடைய காலஎல்லைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2655/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்றுமதி பதனிடல் வலயமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி ஏற்றுமதி பதனிடல் வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஏற்றுமதி பதனிடல் வலயம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3198/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மீன் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகள் முழுமையாக ஒருங்கிணைந்த உற்பத்திப் பொறித்தொகுதிகளைக் கொண்டுள்ளனவா என்பதையும்;

(ii) இத்தொழிற்சாலைகளினால் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவையும்;

(iii) மீன் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன்களின் எண்ணிக்கையையும்;

(iv) மீன் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரை இலங்கையில் விற்கப்படும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீனின் பெயர் விபரச் சீட்டை அல்லது வணிகக் குறிப்பெயரையும்;

(v) மேற்கூறிய மீன் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகளினால் அவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து உள்நாட்டு வரியாக செலுத்தப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3524/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொக்கல விமானப்படை முகாமருகில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான வீடமைப்புத் தொகுதியொன்று அமைந்துள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

(iv) அதற்கான நிதியங்கள் பெறப்பட்ட மூலங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி வீட்மைப்புத் தொகுதியில் குடியமர்வதற்காக வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கருத்திட்டம் இற்றைவரை பொதுமக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டிராவிடின் அது தேசிய செல்வத்தை நாசமாக்குவதாகும் என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) ஆமெனில், சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக அல்லது வேறேதேனும் பயனுறுதிமிக்க நடவடிக்கைக்காக அவ்வீடமைப்புக் கருத்திட்டத்தை ஈடுபடுத்த திட்டமிடுவாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 07, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2656/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பால் உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 100 பால் உற்பத்திக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின் மேற்படி பால் உற்பத்திக் கிராமங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3156/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

(ii) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்களான திருமதி இந்திராணி சுகததாச மற்றும் திரு. திலக் கருணாரத்ன ஆகியோரினால் வெளிப்படுத்தப்பட்டவாறு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பங்குச் சந்தையினைச் சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் தொடர்பில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் நடைபெற்ற அறிக்கை செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சில மாபியா நடவடிக்கைகள் விசாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விசாரணையின் தற்போதைய நிலையினையும்;

(iii) இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iv) நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒத்திணங்கிய சம்பவங்களையும்;

(v) தீர்வுக்கு வருவதற்கு ஏற்பட்ட செலவினையும்;

(vi) இவ்வாறான தீர்வுகளுக்கு வருவதற்கு அரசியல் அழுத்தங்கள் இருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3381/ '12

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காட்டு யானைகளின் தாக்குதல்களினால் மரணிக்கும் ஆளொருவருக்காக செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை,

(i) வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) வழங்கப்படுதல் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) வழங்கப்படும் போது ஒரு நபருக்கு வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அத்தொகை போதுமானதா என்பதையும்;

(v) மேற்படி தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) அதிகரிக்கப்படுமெனில், அதிகரிக்கப்படும் பணத் தொகை மற்றும் அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காட்டு யானைகளினால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்காக நட்டஈடு செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறு செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) பயிர்ச் சேதங்களுக்கான நட்டஈட்டுத் தொகை தீர்மானிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) காட்டு யானைகளினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் மற்றும் பயிர் சேதங்கள் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டங்களை காப்பீடு செய்வதற்கான காப்புறுதித்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) துப்பாக்கிச் சூடு, மின்சாரத் தாக்கம் அல்லது வேறு முறைகளினால் காட்டு யானையொன்றைக் கொலை செய்கின்ற ஆளொருவருக்கு தண்டப் பணம் விதிப்பதற்கு அல்லது வேறு தண்டனை வழங்குவதற்கான சட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்சட்டத்தின் கீழ் விதிக்கக்கூடிய தண்டப் பணம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தண்டப் பணத்தை செலுத்தாத ஒருவரை சிறையிலிடக்கூடிய கால எல்லை யாதென்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3525/ '12

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவின் நூபேவில் அமைந்துள்ள புராதன ஒல்லாந்த வர்த்தகக் கட்டடத் தொகுதியானது தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த ஓர் இடமாகுமென்பதையும்;

(ii) அதற்குரிய கட்டடங்கள் தற்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடங்களைப் புனரமைத்த பின்னர் அரசாங்கத்திற்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் பொருட்டு ஈடுபடுத்த இயலுமென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) ஆமெனில், நூபே புராதன ஒல்லாந்த வர்த்தகக் கட்டடத் தொகுதியை புனரமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(v) அதன் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3744/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் இல்லாதொழிக்கும் சர்வதேச உடன்படிக்கை (CEDAW) மற்றும் பெண்கள் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான இலங்கை பெண்கள் சமவாயம் போன்ற பல்வேறு சர்வதேச மற்றும் உள்நாட்டு உடன்படிக்கைள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஏற்புடைய உடன்படிக்கைகள் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றில் கைச்சாத்திட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பால்நிலையில் சமத்துவமின்மை (Gender inequality) நிலவுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இந்நிலைமையை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2657/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் தற்போது செய்கை பண்ணப்படுகின்ற பயிருக்காகவும் சம்பந்தப்பட்ட விதைகளும் உரமும் இலவசமாக வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் மேலே குறிப்பிட்டவாறு விதைகளும் உரமும் இலவசமாக வழங்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3220/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் தற்போதுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் (தேசிய மற்றும் மாகாண) மொத்த எண்ணிக்கையையும்;

(ii) அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு வருடாந்தம் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) ஒரு வருடத்தில் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரம் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களின் சராசரி எண்ணிக்கையை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3528/ '13

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலிக் கோட்டை பழைய தபால் அலுவலக கட்டடம் தொல்பொருளியல் முக்கியத்துவமிக்க இடமொன்றாகும் என்பதையும்;

(ii) தற்போது மேற்படி கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதென்பதையும்;

(iii) மேற்படி கட்டடம் அமைந்துள்ள நிலத்தில் அத்துமீறி குடியேறியுள்ள நபர்கள் இருப்பதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) காலி கோட்டை பழைய தபால் அலுவலக கட்டடத்தையும் அதன் வளங்களையும் பயன்படுத்தாமல் கைவிடப்பட்டிருப்பது பேரழிவொன்றாகுமென்பதையும், மேற்படி அலுவலக கட்டடத்தை புனரமைத்ததன் பின்னர் அரசாங்கத்துக்கு வருமானம் ஈட்டிக் கொள்ள முடியுமென்பதையும் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கட்டடத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(vi) மேற்படி கட்டடம் அமைந்துள்ள காணியில் அத்துமீறி குடியிருப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 09, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2658/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுய தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு விருப்பமுள்ள சகலருக்கும் குறித்த சுயதொழில்வாய்ப்புக்குத் தேவையான உபகரணத் தொகுதியொன்று வீதம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், சுய தொழில்வாய்ப்புகளுக்குத் தேவையான மேற்படி உபகரணத் தொகுதிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3221/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012ஆம் ஆண்டில் ஒவ்வொரு மத அடிப்படையில் இலங்கை சனத்தொகையின் சதவீதத்தை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) 2012 இல் மேற்கொள்ளப்பட்ட தேசிய கணிப்பீட்டின் மூலம் மேற்படி விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) மக்கள் பலவந்தமாக மதம் மாற்றியமை தொடர்பாக அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மக்களை பலவந்தமாக மதம் மாற்றினார்கள் என கண்டறியப்பட்ட ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3347/ '12

கௌரவ பி. ஹரிசன்,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வலு, சக்தி அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள அரச வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்நிறுவனங்களில் அரச வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவையென்பதையும்;

(iv) இவ்வுத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கு கொடுப்பனவுகள் செய்யப்படும் முறை யாதென்பதையும்;

(iii) இவ்வாகனங்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களை உபயோகிக்கும் உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள அரச வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட வாகனங்களை வேறுபடுத்தி இனங்காணும் முறையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது பற்றித் தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அரச வாகனங்களில் அரச இலச்சினையுடன் உரிய நிறுவனத்தின் பெயர் குறிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3533/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிரிந்த புகுல்வெல்ல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயல் காணிகள் நிரப்பப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி நிரப்பப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி நிரப்பல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை கிரிந்த புகுல்வெல்ல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை நிரப்புவதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை நிரப்புவதற்கான சந்தர்ப்பம் வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2659/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு ஒவ்வொரு ஆதார வைத்தியசாலையிலும் விளையாட்டுக்கள் சுகாதார அலகொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3222/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிருவாக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006, 2007, 2008, 2009, 2010, 2011, மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் அரச சேவையில் உருவாக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட தொழில்கள் உருவாக்கப்பட்ட துறைகள் யாவையென்பதையும்;

(iii) விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டதன் மூலமா மேற்குறிப்பிட்ட தொழில்கள் உருவாக்கப்பட்டன என்பதையும்;

(iv) ஆட்களை தெரிவுசெய்தல் திறமையின் அடிப்படையிலா நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3348/ '12

கௌரவ பி. ஹரிசன்,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3534/ '13

கௌரவ புத்திக பதிரண,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் தலைவர், உபதலைவர் உள்ளடங்கிய பணிப்பாளர்களின்,

(i) பெயர்கள், பிறந்த திகதிகள், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளையும்;

(ii) வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் அளவுகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகளையும்

தனித்தனியாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவரா?

(ஆ) (i) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் தற்போதைய பணிப்பாளர் நாயகத்தின் வயது மட்டத்தைக் கருத்திற் கொள்ளும்போது இவரை அப்பதவியில் அமர்த்துவதற்கு தாபன விதிக் கோவையின் சட்ட விதிகளின் பிரகாரம் முடியுமா என்பதையும்;

(ii) மேற்படி நபர் இரண்டு அரச நிறுவனங்களில் பதவி வகிப்பதாக மேற்படி நம்பிக்கைப்பொறுப்பைச் சேர்ந்த ஊழியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி இரண்டு நிறுவனங்களும் யாவையென்பதையும்;

(iv) இவருக்கு மேற்படி நிறுவனங்களால் மாதம்தோறும் செலுத்தப்படுகின்ற சம்பளங்கள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

(v) மேற்படி நம்பிக்கைப்பொறுப்பின் பிராந்திய பணிப்பாளர் ஒருவராகிய மர்வின் பெரேரா என்பவர் உரிய வயதைக் கடந்துள்ள நிலையிலும் ஓய்வுபெறச் செய்யாதமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 10, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2368/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை 'இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்' கொள்கைத் தொடரின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவாக ஒரு வேளை சோறு இலவசமாக வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின்படி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பகல் உணவு கிடைக்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பகல் உணவாக ஒரு வேளை சோறு வழங்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பகல் உணவு வழங்குவதற்காக மேற்படி பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2522/ '12

கௌரவ புத்திக பதிரண,—சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்திற்காக 2011ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்டதின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட பணத்தில் செலவுசெய்யப்பட்ட உண்மையான செலவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2012 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மேற்படி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் திறைசேறி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புகளில் பணத்தை முதலீடு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர், குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2818/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சூரியவெவ கிரிக்கெட் மைதானம் தொடர்பாக,

(i) மாதாந்த மற்றும் வருடாந்த பேணல் செலவு, வட்டிச் செலவு ஆகியன எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் பெறு மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மாதாந்தம் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சூரியவெவ கிரிக்கெட் மைதான கருத்திட்டக் கடனை மீளச் செலுத்துதல் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) இக்காலப்பகுதிக்கான பணப் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்காக கடன் கொடுத்தவர்கள் அனைவருக்கும் கடன் மீளச் செலுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3350/ '12

கௌரவ பி.ஹரிசன்,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3745/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது அரச சேவையில் உள்ள,

(i) மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி எண்ணிக்கையில் பெண் ஊழியர்களின் சதவீதம்;

(iii) அமைச்சுச் செயலாளர்களின் எண்ணிக்கை;

(iv) அமைச்சுச் செயலாளர் பதவி வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை;

(v) அமைச்சு செயலாளர் பதவி வகிக்காத இலங்கை நிருவாகச் சேவை அலுவலர்களின் எண்ணிக்கை;

(vi) மேற்படி அ(v) இன் அலுவலர்களிடையே உள்ள பெண் ஊழியர்களின் எண்ணிக்கை;

(vii) ஒவ்வொரு தர மட்டத்திலும் உள்ள மேற்படி பெண் ஊழியர்களின் சதவீதம்

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2370/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தில் "சேனக பிபிலே ஔடதக் கொள்கை"யை மீண்டும் அமுல்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வாக்குறுதி வழங்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இற்றைவரை இக்கொள்கை அமுல்படுத்தப்படாது தாமதமடைந்துள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் மிகவும் அதிகமாக பயன்படுத்தப்படும் மருந்துவகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்து வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இம்மருந்து வகைகள் யாவையென்பதையும்;

(iii) உள்நாட்டில் மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கு வருடாந்தம் செலவிடப்படுகின்ற பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2703/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவருகின்ற பிரிவேனாக்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களுக்கு அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச புகையிரத பயணச் சீட்டு, குறைந்த வட்டியில் வழங்கப்படும் ஆதனக் கடன் மற்றும் இடர் கடன் ஆகியன வழங்கப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) சமனான சேவையை நிறைவேற்றும் ஆசிரியர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு விதத்தில் கவனித்தல் நியாயமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில் , மேற்படி நிலைமையை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2819/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கு வருகை தருகின்ற விமானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய விமான சேவைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவை நிலையானவையா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டவையா என்பதையும்;

(iv) அவை விமானச் சேவை நடவடிக்கைகளுக்காக ஆறாவது சுயாதீனப் போக்குவரத்து அனுமதியை (sixth freedom traffic), அதாவது வேறு இரண்டு நாடுகளுக்கிடையே சேவை வழங்கும் போது தமது நாட்டிலும் தரித்து நின்று மீண்டும் பறக்கின்ற அனுமதியை, பெற்றுள்ளனவா என்பதையும்;

(v) இச்சகல விமான சேவைகளினாலும் ஒரு மாதத்திற்கு போக்குவரத்துசெய்யக்கூடிய மொத்தப் பயணிகளையும்;

(vi) கடந்த வருடத்தில் உல்லாசப் பயணிகளின் மொத்த வருகைகள் யாதென்பதையும்;

(vii) உல்லாசப் பயணிகளின் வருகையின் இலக்கினை அடைவதற்கு இவ்விமானச் சேவைகள் எவ்வாறு உதவும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 11, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1652/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் பல வருடங்களாக இடைவிடாது சேவையில் ஈடுபடும் பாடசாலை கல்விசாரா ஊழியர்களின் சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்;

(ii) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இவர்கள் இதுவரை சிறியதொரு நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்விசாரா ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்களது சேவையை நிரந்தரமாக்காமலிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காரணங்களை தவிர்த்து இவர்களை நிரந்தர ஊழியர் குழாமில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1850/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கடந்த 5 வருடங்களின்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 பாரிய அளவிலான செலவு அதிகரிப்புகளை துறைமுக மற்றும் வருட வாரியாகவும்;

(ii) மேற்படி (i) இனைத் தீர்மானிப்பதற்கு சகல பகுதிகளையும் ஒன்றுசேர்ப்பதன் கூட்டுவிளைவையும்;

(iii) செலவு அதிகரிப்பு விகிதாசாரத்திற்கேற்ப வருமான அதிகரிப்பு காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், இக்குறைபாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 6 வருடங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் ஒருவருக்கான வருமானம், செலவு, இலாபம் மற்றும் சேர்பெறுமதி ஆகியவற்றை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2260/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மஹாபொல புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3356/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3409/ '13

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில்,

(i) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மீன்களின் அளவு;

(ii) அதன் பெறுமதி;

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அல்லது மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக அதன் பெறுமதி;

எவ்வளவென்பதை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) 2006 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மீன்களின் அளவு மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட டின் மீன்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) 2006 முதல் 2012 வரையிலான காப்பகுதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு, மாசி, இறால் அல்லது ஏனைய மீன்சார்ந்த உற்பத்திகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பொருளினதும் ஏற்றுமதிப் பெறுமதி மற்றும் இறக்குமதிப் பெறுமதி எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3576/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தபால் சேவையை வலைப்பின்னலொன்றாக்குவதற்காக ரூபா 30 கோடிக்கு மேற்பட்ட பணத்தொகையொன்று செலவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட கணினிகளும் துணைப்பாகங்களும் 05 வருடகாலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளின் உத்தரவாதக் காலம் தற்போது முடிவடைந்துள்ளதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ள நபர் ஊழல் குற்றச்சாட்டொன்றில் குற்றவாளியாகியுள்ளாரென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாதெனக் கூறி தபால் மாஅதிபர் பொறுப்புக்கூறுவதிலிருந்து விலகியுள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டதிற்காக ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 30 கோடிக்கு மேலதிகமாக மேலும் ரூபா 35 கோடியை தபால் திணைக்களம் கோரியதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3743/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டளவில் நாட்டின் வரி முறைமையை ஆராய்ந்து தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ள சனாதிபதியினால் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய ஆணைக்குழு குறிப்பாக எப்போது நியமிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் அவர்களின் இணைப்பையும்;

(iii) ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது நிறைவடைந்தது என்பதையும் அது எப்போது சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வறிக்கை எப்போது சபையில் சமர்ப்பிக்கப்படும் என்பதையும்;

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்கூறிய ஆணைக்குழுவின் நியமனத்துக்கு முன்னைய வருடத்துக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானத்தையும்;

(ii) 2012ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானத்தையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3746/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 6 ஆம் தரத்திலிருந்து உயர் தரம் வரை ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உயர் தரம் மாத்திரம் ஆங்கில மொழி மூலம் போதிக்கும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அரசின் ஆங்கில மொழி மூலப் பாடசாலைக் கல்வி திருப்தியளிக்கக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 12, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1941/ '11

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள அலபலாதெனிய பிரதேச தேயிலை விஸ்தரிப்பு நிலையத்துக்குரிய கட்டிடங்கள் மற்றும் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலம் பயன்படுத்தாமல் கைவிடப்பட்டுள்ளமையினால் காடடர்ந்து வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி நிலையம் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருப்பது பெரும் தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அலபலாதெனிய பிரதேச தேயிலை விஸ்தரிப்பு நிலையம் கைவிடப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையத்தை புனரமைத்து அதன் மூலம் பிரதேசத்தின் தேயிலைச் செய்கையாளர்களின் துறைசார்ந்த பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2245/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையிலுள்ள உலக மரபுரிமைகள் மற்றும் தலங்கள் யாதென்பதையும்;

(ii) இவ்வெழில்மிகு தலங்களை பராமரிப்பதற்கும் செம்மையாக வைத்திருப்பதற்கும் செலவிடப்பட்ட பணத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) கடந்த மூன்று வருடங்களில் இந்த உள்ளூர் உலக மரபுரிமை தலங்களுக்கு விஜயம் செய்த ஆட்களின் எண்ணிக்கை ஆண்டு ரீதியாக யாதென்பதையும்;

(iv) கடந்த மூன்று வருடங்களில் அத்தலங்களில் பெற்றுக் கொண்ட வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட தலங்களில் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சேவையில் ஈடுபட்டிருந்தோரின் எண்ணிக்கையை தனித்தனியாக கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2343/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) “மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு” கொள்கைத் திட்டத்தின் மூலம் இலங்கையில் பிறக்கின்ற அனைத்து பிள்ளைகளினதும் சுயவிபரக் கோவையொன்று இப்பிள்ளையின் நிரந்தர வதிவிடத்திற்குரிய ‘ஜனசபா’ செயலகத்தில் பேணிவரப்படவேண்டுமென முன்மொழியப்பட்டள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது இவ்வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3358/ ’12

கௌரவ பி. ஹரிசன்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3601/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரிய நாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களில், 2012 ஆம் ஆண்டினுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக கொரியாவில் தொழில் வாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவ்வாறு அனுப்பப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3630/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்,

(i) முகாமைத்துவ பீடத்தில் விரிவுரையாளர்களது பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பீடத்தில் உள்ள பேராசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அளவையியல் விஞ்ஞான பீடத்தில் விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய கல்விசார் பணியாட்டொகுதியில் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(iv) சமூகவியல் மற்றும் மொழிப் பீடத்தில் விரிவுரையாளர்களது பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3774/ '13

கௌரவ விஜித பேருகொட,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1987 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையே சனாதிபதி கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன அவர்களாலும் பிரதம அமைச்சர் கௌரவ ராஜீவ் காந்தி அவர்களாலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதி மற்றும் உடன்படிக்கை களில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் சுருக்கமாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3912/ '13

கௌரவ ருவன் ரணதுங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முப்படைகளின் மருத்துவ சேவையிலிருந்து சட்டரீதியாக நீங்கியுள்ள மருத்துவர்களை மீண்டும் அரசாங்க மருத்துவ சேவைக்கு ஆட்சேர்க்கும்போது சேவை அனுபவம், தரம் மற்றும் சேவை மூப்பு கவனத்திற் கொள்ளப்படாது இவர்கள் ஆரம்ப தரத்தின் மருத்துவர் பதவியில் அமர்த்தப்படுகின்ற அநீதியானதொரு முறையியல் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இராணுவ சேவையிலிருந்து நீங்கி தொடர்ந்தும் நாட்டுக்கு சேவையாற்றுவதற்கு விரும்புகின்ற பெரும்பாலான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இந்த நிலைமை காரணமாகியுள்ளது என்பதையும்;

(iii) இவ்வாறானதொரு நிலைமையிலும், அரசாங்க மருத்துவ சேவையில் இணைந்து கொண்ட மருத்துவர் திரு எம்.டி.டபிள்யு. லொக்குகே உள்ளிட்ட மருத்துவர்கள் பலர் தற்போது கடும் அநீதிக்கு உள்ளாகி வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தரத்தை குறைத்து மேற்படி மருத்துவர்களை அரசாங்க மருத்துவச் சேவைக்கு ஆட்சேர்ப்பதானது, இராணுவ சேவையின் கீழ் இவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையைத் தவறொன்றாகக் கருதி தண்டனை வழங்குதலாக அமையாதா என்பதையும்;

(ii) யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் முப்படையின் மருத்துவ படையணியில் இணைந்து ஆற்றியுள்ள சேவையை பாராட்டாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மருத்துவர்களை ஆட்சேர்க்கின்றபோது தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவுகள் மற்றும் 14.4 மற்றும் VII ஆம் அத்தியாயத்தின் 9.3 மற்றும் 9.4 பிரிவுகளுக்கு அமைய பெற்றுக் கொடுக்கத்தக்க அனுசரணைகளைப் பெற்றுக் கொடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 13, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1946/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஓராண்டு காலம் தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் றம்புக்கனையில் அமைந்துள்ள வெள்ளைத் தும்புத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு தொழில்களின்றி பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளைத் தும்புத் தொழிற்சாலைசார்ந்த நிலையத்தினால் வேலையில்லாத இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறியொன்று நடத்தப்பட்டு வந்ததென்பதையும்;

(iii) புத்தாக்கங்களுக்காக சனாதிபதி விருதினைக் கூட வென்றெடுத்துள்ள மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பதானது தேசிய ரீதியில் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மீண்டும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2314/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) இற்றைவரை,

(i) நாட்டிலுள்ள ஊழியர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதியம் முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவையென்தையும்;

(iii) ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) ஊழியர் சேமலாப நிதியத்தின் இசைவற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இசைவற்ற ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்குரிய பணம் ஏன் அறவிடப்படவில்லை என்பதையும்;

(vi) அறவிடப்படாத உறுப்பினர்களின் பணப் பெறுமதி யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2362/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கட்டுவன பிரதேச செயலகப் பிரிவில் உலஹிட்டியாவ மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் வெலிப்பிட்ய இம்புல்கொட வீதியில் அம்பகஸ்ஆர சந்தியில் இருந்து முன்னோக்கியதாக ஏறக்குறைய 1 1/2 கிலோமீற்றர்கள் கொங்கிறீட் இடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூ.1,287,312 அளவிலான மதிப்பீடொன்று அப்பணிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) உரிய தரங்களுக்கு இணங்க அமைக்கப்படாமையால் ஏற்கெனவே அவ்வீதி நிலத்தில் அமிழ்ந்துள்ளதென்பதையும்;

(iv) இருந்த போதிலும் பிரதேச சபை உறுப்பினர்களினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினதும் எதிர்ப்பினைப் பொருட்படுத்தாமல் அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் அழுத்தத்தின் பேரில் அதன் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதியை அமைத்தல் தொடர்பான தலத்திற்கான தர அறிக்கையில் பெற்றுக்கொண்டு இந்தப் பணவிரயம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து முறைதகாத வகையில் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3265/ ’12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மில்கோ கம்பனியின் அம்பேவெல கிளையில் பால் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் இல்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) அம்பேவெல கிளையில் களஞ்சிய வசதி இன்மையினால் பால் மாவை உற்பத்தி செய்வதற்காக கிரீமாக மாற்றப்பட்டிருந்தபோது அப்புறப்படுத்தப்பட்ட பால் லீற்றர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) மேற்படி பாலின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மில்கோ கம்பனியின் மாதாந்த வருமானம் மற்றும் தேறிய இலாபம் எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3426/ '13

கௌரவ. பி. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 திசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு விபத்துக்களினால் அனர்த்தத்திற்கு இலக்காகிய அல்லது சேதமுற்ற வயல்களின் ஏக்கரளவு ஒவ்வொரு மாவட்டவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(ii) அனர்த்தத்திற்கு இலக்காகிய மேலே குறிப்பிட்ட வயல்களின் அளவு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) சேதமுற்ற அவ்வயல்களுக்காக நட்டஈடு வழங்குதல் எந்த நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3686/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குவைட் நாட்டிற்கு தொழில்வாய்ப்புக்காகச் சென்றுள்ள இலங்கைப் பெண்கள் 300 பேருக்கும் அதிகமானவர்கள் அங்கு அவர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ள பல்வேறு தொல்லைகள், கஷ்டங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக சேவை நிலையங்களிலிருந்து தப்பிச் சென்றுள்ளதனால் வேறு எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறு கஷ்டங்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கை ஊழியர்களின் கஷ்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக குவைட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அலுவலர்களிடமிருந்து மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான முறையான, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தற்போது குவைட் நாட்டில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை துரிதமாக இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3936/ '13

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயிலுநர் ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை கடைசியாக நடைபெற்ற ஆண்டு யாதென்பதையும்;

(ii) பல்வேறு காரணங்களால் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியாமற்போனதன் காரணமாக பயிற்சி சான்றிதழ் கிடைக்காதிருந்த பயிலுநர் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்காக விசேட பரீட்சையொன்றை நடாத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எத்திகதியில் நடைபெறும் என்பதையும்;

(v) மேற்படி (iii)இல் குறிப்பிட்டுள்ளவாறு செயலாற்றாவிடின், அந்த பயிலுநர் சான்றிதழ்களைப் பெறாதுள்ள ஆசிரியர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4173/ ’13

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியானது, நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் வருகின்ற ஒரு நியதிச்சட்ட நிறுவனமா என்பதையும்;

(ii) இன்றேல், இது அமைச்சின் பொறுப்பில் இல்லாத சுயாதீனமான ஒரு நிறுவனமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை மத்திய வங்கியின்,

(i) பிரதம கணக்கீட்டு அலுவலர் யார் என்பதையும்;

(ii) நாணயச் சபையின் கடமைகள் யாவை என்பதையும்;

(iii) முகாமைத்துவ மற்றும் நிருவாகத் தீர்மானங்களின் இறுதி அதிகாரி யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை மத்திய வங்கிக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றும், சம்பளக் கட்டமைப்பொன்றும் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை அங்கீகரித்துள்ள அதிகாரி யார் என்பதையும்;

(iii) அதற்கு தேசிய சம்பளங்கள், ஆளணியினர் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கை மத்திய வங்கியின் பணியாட்டொகுதியின் சம்பள மீள்திருத்த முறை மற்றும் அதற்காகப் பயன்படுத்துகின்ற தகவுதிறன்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி (இ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பளக் கட்டமைப்பை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 14, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1949/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தில் படல்கும்புர பிரதேச சபைக்குச் சொந்தமான நக்கல வாரச் சந்தை இற்றைக்கு சுமார் ஓராண்டுக்கு முன்னர் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பல்வேறு ஆட்களின் நிர்ப்பந்தங்கள் காரணமாக தற்போது வியாபாரிகளுக்கு அங்குவந்து வியாபாரம் செய்ய முடியாதுள்ளது என்பதையும்;

(iii) இதனால் வாரச் சந்தை பாழடைந்து காணப்படுகிறது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நக்கல வாரச்சந்தையில் நிலவுகின்ற இந்நிலைமையை தவிர்த்து வியாபாரிகளுக்கு சுதந்திரமாக வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் பாதுகாப்பு தொடர்பில் இவர்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2318/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2011 ஆம் ஆண்டில்,

(i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரினால் வீடுகள் கட்டுவதில் செலவழித்த தொகையையும்;

(ii) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(iii) அவ்வீடுகள் கட்டப்பட்டிருக்கும் அமைவிடங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டில்,

(i) வீடமைத்தலுக்காக ஒதுக்கப்பட்ட தொகையையும்;

(ii) அதே விடயத்தில் இற்றைவரை செலவழித்த தொகையையும்;

(iii) புதிதாக கட்டப்பட்ட வீடுகளின் அமைவிடங்களையும்

அவர் மேலும் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2371/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தலசீமியா நோய் பரவியுள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை அறிக்கையிடப்பட்டுள்ள தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வெறாக எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது தலசீமியா நோய் பரவியுள்ள மாவட்டங்களில் வாழுகின்ற மொத்த தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அதிகமான தலசீமியா நோயாளிகளைக் கொண்டதும் இதனால் அதிகமான மரணங்கள் சம்பவித்துள்ளதுமான மாவட்டம் யாதென்பதையும்;

(v) மேற்படி மரணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அந்த மாவட்டத்திலுள்ள தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தலசீமியா நோய்க்கு நிரந்தரமான சிகிச்சைமுறை உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) தலசீமியா நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற ஊசி மருந்து யாதென்பதையும்;

(iv) இம்மருந்து எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது என்பதையும்;

(v) ஊசிமருந்து இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3427/ ' 13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெள்ளப் பெருக்கின் காரணமாக சேதமடைந்த மரக்கறி, பழங்கள் மற்றும் தானியப் பயிர்ச் செய்கைகளுக்காக இவற்றை செய்கைபண்ணிய விவசாயிகளுக்கு உதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பயிர்ச்செய்கை ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இவ்வாறு நட்டஈடு வழங்கப்படாவிடின் இவ்விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3900/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மார்ச் மற்றும் ஏப்பிறல் மாதங்களில் அரசாங்க மருத்துவமனைகளில் ஏற்பட்ட கடும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக அறிவாரா என்பதையும்;

(ii) குறித்த காலப்பகுதியில் தட்டுப்பாடு ஏற்பட்ட மருந்துகள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவிய அரசாங்க மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 02 மாதங்களினுள் அரசாங்க மருத்துவமனைகளில் நாளொன்றில் உயிரிழந்த நோயாளர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(v) மேற்படி கால கட்டத்தில் மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு அவசியமாகவிருந்த மருந்துகளில் கிடைக்காதிருந்த அளவு யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1955/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கா/பிரஜாபதி கோதமி மகளிர் கல்லூரிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் தனிப்பட்ட உரிமையாளரொருவர் அன்பளிப்பாக நல்கிய அம்பலன்கொடை விலேகொடையில் அமைந்துள்ள மூன்று மாடிவீடு, இதுவரை எந்தவித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாது சேதத்திற்குள்ளாகி வருகின்றது என்பதையும்;

(ii) சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வீடு, பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளது உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தை இடித்தகற்றிவிட்டு, அந்த இடத்தில் கூட்ட மண்டபமொன்றை அமைத்துத் தருமாறு பாடசாலை அதிபர் பல தடவைகள் உரிய அதிகாரிகளிடம் வேண்டியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை அதிபரின் மேற்படி கோரிக்கைக்கு அமைய செயற்படும் பொருட்டு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2322/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010, 2011, மற்றும் 2012 ஆகிய வருடங்களில் 9 மாகாண சபைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வருடங்களில் ஒவ்வொரு மாகாண சபையிலும் நிதி ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஒவ்வொரு மாகாண சபையினாலும் அரசாங்க ஒதுக்கீடுகளிலிருந்து செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) மாகாண சபையினால் ஈட்டப்பட்ட பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பெறுமதியையும்;

(iii) அரசாங்க கொடையாகவும், வருமானப் பங்காகவும் ஒவ்வொரு மாகாண சபையினாலும் பெறப்பட்ட தொகையையும்;

(iv) ஒவ்வொரு மாகாண சபையினதும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைத் தேவைப்பாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டன என்பதையும்;

தனித்தனயாக அவர் கூறுவாரா?

(இ) சொல்லப்பட்ட மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்திடம் இருந்த அதிகாரங்கள் தரமாகப் பெறப்பட்டதன் பின்னர்அவற்றின் வருமான சேகரிப்பு முறைமை முன்னேற்றமடைந்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2437/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் கல்விப் பணிப்பாளர் பதவிகளில் பதில் கடமையாற்றும் பதில் கல்விப் பணிப்பாளர்களின்,

(i) எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பெயர்கள் மற்றும் தற்போது பணி புரியும் இடங்கள் யாவை என்பதையும்;

(iii) நியமனங்கள் செய்யப்படுவதற்கு முன்னர் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பதில் பணிப்பாளர்களாக நியமனம் பெற்றவர்களின்,

(i) முன்னர் பணி புரிந்த இடங்கள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது இலங்கை அதிபர்கள் சேவையில் வகுப்பு மற்றும் தரங்கள் யாவையென்பதையும்;

(iii) தொழில் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) நியமனம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை கல்வி நிருவாகச் சேவைப் பிரமாணங்களின் படி பணிப்பாளர் பதவிகளில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாது என்பதையும்;

(ii) அந்தச் சேவையில் பதவிகளுக்கான பதில் நியமனங்களை வழங்கும் அதிகாரம் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மாத்திரமே உள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) தற்போது மேற்கூறிய சேவையிலுள்ள நிரந்தர பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக சேவைப் பிரமாணங்களுக்கமைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுந்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2606/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பொழிப்பின் 67 ஆம் பக்கத்திலுள்ள, வெளி மாகாணங்களில் கடமையாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தல் பற்றிய விசேட சட்ட அறிவினை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வழிகள் இல்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) வெளி மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கான மதியுரைகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அலகுகளை தாபிக்கும்படி மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2997/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக வழக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வழக்குகளில் தற்போது விசாரணை மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் விசாரணை முடிவடைந்துள்ளவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை விசாரணைக்கு எடுக்கப்பட்ட சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டணை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச தண்டனை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3013/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹ/தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவரொருவர் 2007 ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று தங்காலை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகையில் இடைவழியில் தங்காலையின் அப்போதைய நகர பிதாவினால் பாரதூரமான விதத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது தொடர்பாக தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவ ஆலோசக ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் தங்காலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடு மேற்படி பொலீஸ் நிலையத்தின் முறைப்பாட்டு இலக்கம் C.W.I.B 127ஆம் பக்கத்தின் 24 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி நகரபிதாவுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தங்காலை நகரத்தின் ஓய்வுபெற்ற பிரசைகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) ஆமெனில், மேற்படி முறைப்பாடு தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மெற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3112/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3926/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில்,

(i) முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மூடப்பட்டுள்ள மேற்படி தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஆடைத்தொழில் துறையில் காணப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) ஆடைகள் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஆடைகள் ஏற்றுமதிச் சந்தையின் சதவீதம் எவ்வளவென்பதையும்; அத்துடன்

(vi) ஐரோப்பா சங்கத்தில் மேற்படி சந்தையின் சதவீதம் எவ்வளவென்பதையும்

ஆண்டுவாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3943/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 2013 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும்,

(i) உள்ளடக்கியுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனவா என்பதையும்;

(iv) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை சபா பீடத்தில் வைப்பாரா என்பதையும்;

(v) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3964/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடக்கு, கிழக்கில் நடைபெற்ற யுத்தம் காரணமாக,

(i) அநாதைகளான சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) விதவைகளான பெண்கள் மற்றும் அநாதைகளான சிறுவர்களின் புனர்வாழ்வளிப்புக்காக, 2013 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4172/ '13

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கம்பஹா மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான டிப்போக்கள் மற்றும் வேறு காணிகளில் 30 நாட்களுக்கும் அதிக காலம் சேவையில் ஈடுபடுத்தாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பஸ்வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பஸ்வண்டிகளை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக திருத்த வேண்டியிருப்பின், அதற்குத் தேவையான பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுனாமி அனர்த்தத்தின் பின்னர் உதவியாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குக் கிடைத்த பஸ்வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பஸ் வண்டிகளில் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ள பஸ்வண்டிகளின் எண்ணிக்கை யாது ன்பதையும்;

(iii) 2012 ஜனவரி முதல் இன்றுவரை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள பஸ்வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 18, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2445/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை நில்வலா கங்கையின் பண்டத்தர பிரதேசத்தில் உப்புநீர்த் தடை அணைக்கட்டொன்றை நிர்மாணிப்பதற்காக திட்டங்களை வகுத்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அணைக்கட்டினை நிர்மாணிப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய அணைக்கட்டொன்று நிர்மாணிக்கப்படுமெனில் அதற்காக செலவிட எதிர்பார்க்கப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிதி ஏற்பாடுகள் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுமா இன்றேல் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்குறித்த அணைக்கட்டினை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கும் நிறுவனம் அல்லது நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்படுகின்ற பணத் தொகை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vi) பண்டத்தர பிரதேசத்தில் உப்புநீர்த் தடை அணைக்கட்டொன்றை நிர்மாணிப்பதன் மூலம் பெருமளவிலான விவசாய நிலங்களின் பயிர்ச் செய்கைகள் பாதிப்புக்கு உள்ளாவதாக பிரதேசத்திலுள்ள விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2467/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உரம் யாருக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதையும்;

(ii) ஒரு விவசாயிக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்ற உரத்தின் அளவினையும்;

(iii) மானிய உரத்திற்காக விண்ணப்பிப்பதற்கு விவசாயி ஒருவர் பின்பற்ற வேண்டிய நடைமுறையினையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் உர மானியம் வழங்குவதற்காக செலவிட்ட உண்மையான தொகையினை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்;

(ii) அத்தகைய மானியத்தின் உண்மையான கொடுப்பனவுகளுக்கு ஆதரவளிப்பதற்கான காசோட்டத்தினையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வருடங்களின் வரவு செலவுத் திட்டத்தில் உர மானியத்திற்காக ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2504/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனகபுர வித்தியாலயத்தின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனகபுர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்காக கழியும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 19, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2446/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை – கொழும்பு அதிவேக வீதியில் நூப்பே தொடக்கம் மாத்தறை / கொடகம வரையிலான வீதியை விஸ்தரிக்கின்றபோது காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் சில காணி உரிமையாளர்களின் காணித் துண்டுகள் ஆறு பர்ச்சஸ்களை விடக் குறைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில் நிர்மாணப் பணிகளுக்காக மாத்தறை நகர சபை அனுமதியளிப்பதில்லையென்பதையும்;

(iii) எனினும் மாத்தறை போதி மரத்தடியிலிருந்து நூப்பே வரை தர்மபால மாவத்தையை விஸ்தரிக்கின்றபோது எஞ்சிய காணிகளில் ஆறு பர்ச்சஸ் குறைந்தபட்ச எல்லையை பொருட்படுத்தாது, வீதி அபிவிருத்தி அதிகார சபையியினால் எல்லை குறிக்கப்பட்ட இடத்திலிருந்து கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மேற்படி நகர சபை அனுமதியளித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஒரே நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் மேலே கூறப்பட்டவாறு இரண்டு முறையியல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனால் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி அ (iii) ல் குறிப்பிடப்பட்டுள்ள தளர்த்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் நூப்பே – கொடகம வீதியின் இருமருங்கிலும் அமைந்துள்ள சிறிய காணிகளிலும் நிர்மாணிப்புகளுக்கு அனுமதி வழங்குவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2469/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "தெயட்டகிருல" கண்காட்சி தொடர்பாக,

(i) இற்றைவரை நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அக்கண்காட்சிகள் ஒவ்வொன்றும் நடத்தப்பட்ட இடங்களையும்;

(iii) ஒவ்வொரு கண்காட்சிக்குமான செலவினத்தை வெவ்வேறாகவும்;

(iv) எதிர்காலத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கண்காட்சிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் நடத்தப்பட்ட "தெயட்டகிருல" கண்காட்சியுடன் தொடர்புபட்டதாக,

(i) அது நடத்தப்பட்ட திகதியையும்;

(ii) கண்காட்சித் திடலுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் அமைவிடம் மற்றும் அதன் அளவையும்;

(iii) மொத்தச் செலவு மற்றும் ஒவ்வொரு அமைச்சுக்கான செலவையும்;

(iv) மூலதனப் பொருட்களுக்காகச் செலவிட்ட தொகையை மொத்தச் செலவினத்தின் சதவீதமாகவும்;

(v) எஞ்சியுள்ள மூலதனப் பொருட்கள் அல்லது கட்டிடங்களையும்;

(vi) மேற்குறிப்பிட்ட மூலதனப் பொருட்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2505/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்பத்நுவர வித்தியாலயத்தில் பௌதிக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பத்நுவர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1965/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மலாமுர கால்வாய்க்கு குறுக்காக பாலமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது வரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடையில் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக மேற்படி பாலத்தை துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மலாமுர கால்வாயின் குறுக்காக பாலத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பாலத்தின் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2471/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரத்தில் இடம்பெற்ற "தெயட்டகிருல" கண்காட்சிக்கு இணைந்ததாக அநுராதபுர மாவட்டத்தில் தாபிக்கப்பட்ட விவசாய மேம்பாட்டுப் பண்ணைகளுக்காக செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) அப்பண்ணைகளால் கிடைக்கப்பெற்ற பயன்களையும்;

(iii) "தெயட்டகிருல" கண்காட்சிக்கு முன்னர் ஒயாமடுவ பண்ணைக்குச் சொந்தமாகவிருந்த 500 பசுக்கள் இப்போது எங்கே உள்ளன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) "தெயட்டகிருல" கண்காட்சிக்குச் சமாந்தரமாக தாபிக்கப்பட்ட நிரந்தர நீர் வழங்கல் திட்டத்திற்காக செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்திட்டத்தால் "தெயட்டகிருல" முடிவடைந்த பின்னர் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) ஒயாமடுவ - மனிஸ்ஸாகமுவ - தந்திரமலே புகையிரதச் சேவையை நடத்துவதற்கு ஏற்பட்ட செலவையும்;

(ii) அப்புகையிரதத்தினால் "தெயட்டகிருல" நடைபெற்ற 9 நாட்களிலும் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் பயன்களையும்;

(iii) மேற்கூறப்பட்ட புகையிரதச் சேவையை நடத்துவதற்காக தாபிக்கப்பட்ட பௌதீக கட்டுமானங்களை கழற்றி அகற்றுவதற்காக செலவிடப்பட்ட தொகையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2506/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?